REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 3உ செவ்வாய் (19—10—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 4உ புதன் (20—10—54) [இதழ் 109

சலவைத் தொழிலாளர்களுக்கு நவீன தொழில் பயிற்சி

புதுடில்லி, அக். 17—

கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற சலவைத் தொழிலாளர் மாநாட்டில், தொழில் செய்வதற்கான இட வசதியும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடியிருக்க ஏற்பாடும் செய்துதர சர்க்கார் முன்வர வேண்டும் எனவும், நவீன முறையில் சலவை தொழில் பயிற்சிபெறுவதற்கான தொழிற்பள்ளிகளை கூட்டுமுறையில் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும், விநோபா பாவே பெற்றுள்ள நில நன்கொடையிலிருந்து, தங்களுக்கு நிலம் தர வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளன.

கல்லக்குடி அறப்போராட்டம் வெற்றி

வடவர் ஆதிக்கச் சின்னம் சுக்குநூறாகிறது! அவமான முத்திரை அழிகிறது!

உண்மை வென்றது—உரிமை நிலைத்தது

நடராசன், கேசவன், குமாரவேல் ஆகியோரின் உயிர்த் தியாகம் வென்றது! வேட்கை ஈடேறிற்று!

தி. மு. கழக வரலாற்றின் முக்கிய கட்டம்

வெற்றி! வெற்றி! வீரர்களே, வணக்கம்!

தென் பகுதி இரயில்வே அதிகாரிகள், திருச்சி—விழுப்புரம் குறுக்கு இரயில் பாதையில் உள்ள டால்மியாபுரம் என்ற இரயில் நிலையத்திற்கு அந்த ஊரின் உண்மைப் பெயரான 'கல்லக்குடி' என்று பெயரிட்டுவிட்டனர்.



"வடநாட்டு பண முதலையான டால்மியாவின் பெயரில் திராவிடத்தின் இரயில் நிலையம் ஒன்றிற்குப் பெயர் வைத்திருப்பது தவறு என்றும், அதை மாற்றி, 'கல்லக்குடி' என்ற தமிழ்ப் பெயரையே வைக்க வேண்டு"மென்றும், திராவிட முன்னேற்றக் கழகம், 1953-ம் ஆண்டு ஜூலை 15-ல் கல்லக்குடி இரயில் நிலையத்தில் அறப்போர் துவங்கியது.

இந்த அறப்போரை ஏற்று நடத்த வேண்டிய முழுப் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் மனமுவந்து தோழர் கருணாநிதியிடம் ஒப்படைத்தது.

தோழர் கருணாநிதி, கல்லக்குடி அறப்போருக்குத் தலைமை தாங்கி நடத்தினார்.

திராவிட முன்னேற்றக் கழகம், வடநாட்டு ஏகாதிபத்தியச் சின்னமான டால்மியாபுரம் என்ற பெயர் மாற்றப்பட வேண்டுமென்று நடத்திய அறப்போர் வெற்றியடைந்துவிட்டது. இன்று, சர்க்கார், 'கல்லக்குடி' என்று இரயில் நிலையத்திற்குப் பெயரிட்டுள்ளார்கள்.

கல்லக்குடி அறப்போரை நடத்தும் பொறுப்பை தோழர் மு. கருணாநிதியை தலைவராகக் கொண்டு, திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அம்பில்-தர்மலிங்கம், கல்லக்குடி, தம்புசாமி, திருச்சி நகர தி.மு.க. செயலாளர் எம். எஸ். மணி, கே. ஆர். இராசா, கே. கே. மாணிக்கம், இளமுருகு ஆகியோர் உள்ள குழு ஏற்று நடத்தியது.

கல்லக்குடி அறப்போர் துவங்கிய **15-7-53** அன்று கல்லக்குடியில் போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் லால்குடி தி. மு. கழகத் தோழரான நடராசன், திருச்சி தோழர் கேசவன் ஆகியோர் உயிர் துறந்தனர்.

இந்த அறப்போரில் தோழர் கருணாநிதி, காரைக்குடி இராம. சுப்பையா, முல்லை சத்தி, குழந்தைவேல், குமாரவேல் ஆகியோர் உள்பட 36 தோழர்கள் மூன்று மாதம் முதல் ஆறு மாதம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

ஆறு மாத காலம் சிறையில் இருந்த தோழர் குமாரவேல் சில நாட்களுக்கு முன்னர் நோய்க்கு இரையாகி இயற்கை எய்தினர்.

கல்லக்குடி அறப்போரை, ஆதரித்தும், டால்மியாபுரம் என்ற பெயரை மாற்றி, 'கல்லக்குடி' எனப் பெயரிட வேண்டுமென்றும் திராவிட நாட்டில், பல நகரசபைகள், மாவட்டக் கழகங்கள், பஞ்சாயத்து மன்றங்கள், தனிப்பட்ட நபர்கள் பலரும், பாராளுமன்ற உறுப்பினர்களும், இந்திய சர்க்காரை தீர்மானங்கள், மகஜர்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டனர்.

கல்லக்குடி அறப்போர் சென்ற ஜூலை 15-ல் துவங்கி, சர்க்கார் பெயர் மாற்றம் செய்யும்வரை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அறப்போர் வரலாறு

13-2-53—திருச்சி மாவட்ட தி. மு. கழக செயற்குழு, கல்லக்குடி அறப்போருக்கு தலைமை வகிக்க தோழர் கருணாநிதியைக் கேட்டுக்கொண்டு தீர்மானம்!

26-4-53—கல்லக்குடி அறப்போர் நடத்துவது என்ற தீர்மானம்—தோழர் கருணாநிதி அறப்போர் தலைவராவார் என்று பொதுச் செயலாளர் அறிவிப்பு.

2-5-53—தோழர்கள் கருணாநிதி, அம்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி, கே. ஆர். இராசா, கே. கே. மாணிக்கம், இளமுருகு, கல்லக்குடி தம்புசாமி ஆகியோர் கொண்ட கல்லக்குடி அறப்போர் குழு தேர்வு.

7-5-53—கல்லக்குடி பெயர் மாற்றம் கோரி திண்டுக்கல் நகரசபை தீர்மானம்.

15-6-53—சென்னை முதல் அமைச்சரைக் கண்டு பேச தோழர் இராஜாசிதம்பரம் முயற்சி செய்வதாக உறுதி.

" —உடுமலை நகரசபை ஆதரவுத் தீர்மானம்.

15-6-53—25—6—53 திருச்சி மாவட்டத்தில் கருணாநிதி சுற்றுப் பயணம்.

18-6-53—குளித்தலையில் தி. மு. கழகத்தில் கல்லக்குடி அறப்போர் குழு கூடி, 17—7—53-ல் அறப்போர் துவங்க அனுமதி கோரி, பொதுச் செயலாளரைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றியது.

26-6-53—அறப்போருக்கான தொண்டர்கள் சேருவது பற்றி அறப்போர் தலைவர் கருணாநிதி அறிக்கை.

28-6-53—கல்லக்குடி அறப்போரை ஆதரித்து, இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக இரண்டாவது அரசியல் மாநாட்டில் தீர்மானம்.

6-7-53—அறப் போரை 15—7—53-ல் துவங்க பொதுச் செயலாளர் அனுமதி கிடைத்தமை பற்றியும், அறப்போர் துவங்கப்படும் என்றும் கூறி, பொது மக்கள் ஆதரவு கேட்டு அறப்போர் தலைவர் கருணாநிதி அறிக்கை.

" —கல்லக்குடி அறப்போருக்கு ஆதரவு அளித்து தென் ஆற்காடு மாவட்ட இரண்டாவது தி. மு. க. அரசியல் மாநாட்டில் தீர்மானம்.

" —பொதுச்செயலாளர் அண்ணாதுரை மேற்படி மாநாட்டில், "டால்மியாபுரம் ரயில் நிலையத்தில், அறப்போர் தலைவர் கருணாநிதி, ஜூலை 15-ல், 'கல்லக்குடி' என்று அச்சடித்த தாளை தொண்டர்களுடன் சென்று ஒட்டி அறப்போரைத் துவங்குவார் என்றும், 'கல்லக்குடி' என்ற பெயர் மாற்றம் ஏற்படும்வரை அந்த அறப்போர் நீடிக்குமென்றும் அறிவித்தார்.

12-7-53—கல்லக்குடி அறப்போருக்கு சென்னை மாவட்ட இரண்டாவது தி. மு. க. அரசியல் மாநாட்டில் ஆதரவுத் தீர்மானம்.

" —தோழர் சி. பி. சிற்றரசு கல்லக்குடி அறப்போரின் இரண்டாவது தளபதியாக நியமனம்.

13-7-53—அறப்போர் தொண்டர்களுக்கு அழைப்பு அனுப்பி, களம் அமைந்துள்ளது பற்றி தோழர் கருணாநிதி அறிக்கை.

(4-ம் பக்கம் பார்க்க)

இந்த அறப்போருக்கு வெளிநாடுகளில் உள்ள திராவிடர்கள் தக்க முறையில் ஆதரவளித்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

கல்லக்குடி அறப்போரில், ஈடுபட்டார்கள் என குற்றம் சாட்டப்பட்டு, தோழர்கள் கண்ணதாசன், அம்பில் தர்மலிங்கம், ஆகியோர் உள்பட 21 தோழர்கள் ஒன்றரை ஆண்டு காலம் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர்; இவர்கள் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

சென்ற ஜூலையில் தி. மு. கழகம் நடத்திய மும்முனைப் போராட்டங்களில் ஒன்றான 'கல்லக்குடி' அறப்போர், திராவிடத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய கட்டமாகும்.

கீழூரில் விடுதலை கீதம் பாடினர்

நவ. 1-ல் பிரெஞ்சிந்திய இணைப்பு

இன்று டில்லியில் ஒப்பந்தம் கையெழுத்தாகிறது

இந்தியாவிடம் பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் பொறுப்பை மாற்றுவது பற்றி புதுடில்லியில், இரு நாடுகளுக்கிடையேயும், இன்று, ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகும் என்று தெரிகிறது.

கீழூரில் ஏற்பட்ட முடிவுகளை ஒட்டியே இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. ஒப்பந்தம் கையெழுத்தானதும், பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் நிர்வாகப் பொறுப்பை கேவல்சிங் ஏற்றுக்கொள்வார் என்ற அறிவிப்பும் வெளியாகும் என்று தெரிகிறது.

இந்திய சர்க்கார் இப்பகுதிகளின் நிர்வாகத்தை நவம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து ஏற்றுக்கொள்வார்கள் என்று தெரிகிறது. இறுதியான நிர்வாக மாற்றம் ஏற்படும்வரை அதிகார மாற்றத்திற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

இப்போதுள்ள பிரெஞ்சிந்திய சட்டசபையின் அமைப்பும், அதன் 16 கொம்யூன்களும் அப்படியே நீடிக்குமென்றும், அரசியல் மாற்றங்கள் இப்பகுதி மக்களின் ஒப்புதலுடனேயே நடைபெறும் என்றும் தெரிகிறது.

இப்போது சிவில் இலாகா ஊழியர்களில் பெரும்பான்மையோரின் சர்வீஸ் வசதிகள் உட்பட, அவர்கள் நிர்வாகத்தில் நீடிக்[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 19—10—1954 செவ்வாய்

104 ரூபாய்கள்!

சற்றுப் பலமான காற்று வீசி ஞல் இருந்த இடம் தெரியாது மறைந்து போகும் குடிசை!

மழை பெய்து, எவ்வளவு ஈரம் உள்ளே இருந்தாலும், அரை மணி நேர வெயிலில் காய்ந்து போகும் அளவுக்குக் கூரை யின் அமைப்பு!

'இன்றே, நாளையோ என்று போவோம்' என்று இருமலுக் கிடையே குடிசையின் உள்ளே ஒரு வயது சென்ற உருவத்தின் முனகல்!

பசுவா, காளையா என்று அறிய அதிக நேரம் செலவிட வேண் டிய நிலையில் எலும்புருவாய்க் காட்சியளிக்கும் இரண்டு மாடு கள்!

ஒரு கோழி—அதன் பின்னே கழுகின் பார்வைக்குப் பயந்து செல்லும் குஞ்சுகள்!

போவோர் வருவோர் அனைவ ரையும் பார்த்துக் குலைக்கும் ஒரு நாய்!

இத்தனைக்கும் இடையே, ஒட் டிய வயிறுடன் வானத்தைப் பார்த்து பெருமூச்சு விட்டு நிற் கும் ஒரு மனிதன்—அந்த மனி தன்தான், தென்னகத்திலே, விவசாயி என்று அழைக்கப் படுகிறான்!

வேதனையின் உருவாய், வயல் வெளிகளிலே தடுமாறி நடந்து சென்று, திராவிடத்தின் ஏழ் மையினைப் பிரதிபலிக்கும் அந்த மனிதனின் வாழ்விற் கென்று உள்ள வாய்ப்புகள் ஒரு சில—ஏன், அவனது எண்ணங்களும் ஒரு சில தான்!

தென்னகத்தில் மட்டுமல்ல, இந் திய உபகண்டம் முழுமைக் கும் உள்ள விவசாயிகளின் நிலை, சொல்லவும் இயலாத கோரக் காட்சி!

உழவுத் தொழில், நாட்டின் முதுகெலும்பு போன்றதென் பார்கள். ஆனால், இன்று அந்த முதுகெலும்பு காய்ந்து போய்—உலர்ந்து போயிருக்கி றதாம்—சர்க்காரின் புள்ளி விவரம் ஒன்று கூறுகிறது.

ஆசியாவிலேயே முதல் தட வையாக விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் பற்றிய புள்ளி விபரங்களை இந்திய சர்க் கார் சேர்த்தார்களாம். பெரு மையுடன் இச்செய்தி வெளி யிடப் பட்டுள்ளது. 800 விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கை பற்றிய புள்ளி விப ரங்கள் சேகரிக்கப்பட்டு கணக் கிடப்பட்டதில், இந்திய விவ சாயி ஒருவரின் சராசரி வரு மானம் ரூ. 104—மாதம் ஒன் றிற்கு அல்ல, ஆண்டு ஒன்றிற்கு என்று தெரிகிறதாம்!

இந்தியாவில், பொதுவாக ஒருவரின் சராசரி வருமானம் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 264 என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். நாட்டின் பொது மனிதன் ஒருவனின் சராசரி வருமானத்தில் பாதிக்கும் குறைவாக உள்ளது உழவ னின் வருமானம் என்றால், இது பெருமை தரும் புள்ளி விபரமல்ல—ஆட்சியில் அமர்ந் திருப்போருக்கு எச்சரிக்கை செய்யும் செய்தி இது.

ஏழாண்டுகள் ஆகிவிட்டன என்று பெருமையுடன் பேசு கிறார்கள்—கோடிக்கணக்கிலே திட்டம்; அதற்குத் தேவை யான பணத்தைத் திரட்ட அலைகடலுக்கு அப்பால் அமைச்சர் தேஷ்முக் சென் றிருக்கிறார். எத்தனை திட்டங் கள், எவை எவை என்று பிரித் துப் பேச முடியாத அளவு பல திட்டங்களின் பெயர்களைச் சொல்கிறார்கள் ஆட்சியில் உள்ளோர்!

ஆனால், நாட்டில் வாழும் பெரும்பான்மை மனிதனுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வருமானம் ரூ. 104.

ஆண்டு ஒன்றுக்கு ரூ. 104 வருமானம் உடைய மனிதனின் வாழ்வு எப்படியிருக்கும் என்று நினைக்கவும் நெஞ்சு திடுக்கிடும். தனக்குக் கிடைக்கும் இந்த வருமானத்தை வைத்துக் கொண்டு, ஆண்டு முழுமையும் வாழ வேண்டும் என்றால், இயலுமா?

நாட்டிலே மிகப் பெரிய பகுதி மக்கள் ஏழைகளாக வாழ்கிறார்கள்; ஆண்டிலே ஐந்து மாதங்களுக்குமேல் அவர்களுக்கு வேலையில்லை— என்று தெரிவிக்கும் சர்க்கா ரின் சார்பில் தொழில் அமைச் சராலயம் தயாரித்துள்ள புள்ளி விபரம் இன்னொரு விபரத்தை யும் கூறியிருக்கிறது.

தென் இந்தியாவில் விவசா யத்தை நம்பி வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக் கிறதாம்—நாம் கூறவில்லை— வட இந்தியாவைக் காட்டிலும் தென் இந்தியாவில்தான் விவ சாயத்தை நம்பி வாழும் மக்கள் —ஏழைகள் அதிகமாக இருக் கிறார்கள், என்று புள்ளி விப ரம் கூறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழ கத்தினராகிய நாம் எடுத்துக் கூறி வருகிறோம்—வட நாடு உயர்த்தப்படுகிறது— தென்னாடு தாழ்ந்த நிலையில் உள்ளது என்று.

வடக்கே உள்ள மக்களிடை 'தொழில் உள்ளம்' கொண் டோர் அதிகம் காணப்படு கிறார்கள்; ஆட்சியில் இருப் போரும், வடநாட்டின் உயர் வுக்கே திட்டமிடுகிறார்கள்; திராவிடத்தை அவர்களின் ஆதிக்கப் பகுதியாக அமைத்து வருகிறார்கள்-என்று எடுத்துக் காட்டி வருகிறோம்.

நாம் எடுத்துச் சொல்லும் போது நம்மை எதிர்த்து பேசும் நண்பர்கள், தென் இந்தியாவில் விவசாயிகள் அதிகம் உள்ள னர் என்று கூறும் புள்ளி விப ரத்தை மறுக்கமாட்டார்கள் என்றே கருதுகிறோம்.

திராவிடத்து உழவனுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வருமானம் ரூ. 104.

இந்த வருமானத்தில் அவன் குடும்பம் முழுமையும் பிழைக்க வேண்டும். உணவு, உடை, வீடு, ஊரிலே நடைபெறும் திருவிழா, வீட்டிலே நடை பெறும் திருமணங்கள், முன்பு வாங்கிய கடன் அடைப்பு, தன்னோடு சேர்ந்து உழைக்க மாடுகள் வாங்குவது, ஊரில் தொத்து நோய் பரவியபோது 'ஏழுமலையா'னுக்கு 'வேண் டிக்கொண்ட' காணிக்கை— இத்தனை செலவுகளுக்கும் அவ னுக்குக் கிடைக்கும்வருமானம் ரூ. 104.

எப்படி அவர்கள் வாழ்கிறார்கள்; அவர்களுக்கு ஏற்படும் தொல்லைகள் என்ன வென்பதை யெல்லாம் தி. மு. கழகத்தினர் நாட்டு மக்களி டையே எடுத்துக் காட்டியுள் ளனர்.

காலம் எல்லாம் இயற்கையு டனும், வேதனையுடனும்போரா டும் அந்த சமுதாயத்தை கடந்த ஏழாண்டு காலமாக ஆட்சியில் உள்ள காங்கிரசார் மறந்தே போனார்கள் எனலாம்.

கடன் ஒத்திவைப்புச் சட் டம், நிலத்திலிருந்து வெளி யேற்ற தடை விதிக்கும் சட் டம் இவைகளால் மட்டுமே விவசாயிகளின் வேதனை நீங்கி வறுமை போகும் என்று நம்பினால் அது பயனற்ற நம் பிக்கையாகும்.

இந்திய சர்க்காரால் வெளி யிடப்பட்டுள்ள புள்ளிவிபரம் கூறுகிற குறைகளைப் போக்க என்ன செய்யவேண்டும் என் பதை சென்னையில் புதிதாக ஆட்சிக்கு வந்திருப்போர் சிந் திக்க வேண்டும். ஆனால் தற் போது காங்கிரஸ் இயக்கம், ஒரே நேரத்தில் நிலச்சுவான் தார்களின் ஆதரவையும், உழ வர் குடிமக்களின் அன்புப் பார்வையையும் பெற்றுவிட லாம் என்று தவறாக நம்பிக் கொண்டிருக்கிறது. இரு வரையும் மகிழ்விக்கும் திட்டங் கள் திராவிடத்தில் பயன் தராது என்பதையும் காங்கிரஸ் ஆட்சியினர் உணர வேண்டும்.

ஆட்சிப் பொறுப்பிலே உள் ளவர்கள், முன்னர் பதவி வகித்த அன்பர் ஆச்சாரியார் செய்ததுபோல், மக்கள் குரலை மதியாது, நாட்டு மக்களுக்குக் கேடு விளைவிக்கும் திட்டங்களை தீட்டாது இருந்து விட்டால் மட்டும் போதாது.

மக்களின் வாழ்வு உயர நல்ல திட்டங்களை வகுத்து அதை நிறைவேற்ற வேண்டும். சென்னை சர்க்காரில் பதவி வகிப்போர் விவசாயிகளின் உயர்வுக்கு திட்டமிடுவார்கள் என்றால், அது, பயன் தரு செயலாகும். திட்ட மேதும் நிறைவேற்றாது போனால் ரூ. 104 என்று சொல்லப்படும் விவசாயத் தொழிலாளியின் வருமானம் ஆண்டு தோறும் குறைந்து கொண்டே செல்லும் என்ப தையும், ஆட்சியாளர்கள் உணர்வார்கள் என நம்பு கிறோம்.

என்ன கருணை?

நாட்டில் ஏராளமாக இருக் கின்ற ரிக்ஷா இழுப்போர்களை முன்னேற்றுவது அவசியமெனக் கருதுவதாக மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்களுக்கெழுதி யுள்ள கடிதமொன்றில் குறிப்பிட் டுள்ளதாம்.

வேறு பல வசதிகளுடன், அந்தக் கடிதத்தில், மத்திய அர சாங்கம், ரிக்ஷா இழுப்போருக்கு, நகரசபை, பஞ்சாயத்து சபை ஆகியவற்றால் நடைபெறும் மருத் துவ நிலையங்களில் இலவச மருத் துவ வசதிசெய்து தரப்பட வேண் டும் என்றும், ரிக்ஷாக்கள் நிறுத்து வதற்கு, 'நிற்குமிடங்களு'ம் அந்த இடங்களில் குடிதண்ணீர் வசதி யும் உண்டுபண்ணித் தரவேண்டும் என்றும் யோசனை கூறியுள்ள தாம்.

இந்தியாவிலுள்ள பிரஞ்சுப்பகுதிகள்

நிலப் பரப்பும் மக்கள் தொகை விவரமும்

புதுவை :

சென்னை நகரத்துக்கு சுமார் 100 மைல் தூரத்தில் உள் ளது. 115 சதுர மைல் நிலப் பரப்பு கொண்ட இந்த பிரதேசத் தின் மொத்த மக்கள் எண்ணிக்கை 2,22,572 ஆகும். இப்பிரதேசம் 8 முனிசிபல் பிரிவுகள் கொண்ட தாக இருந்தாலும் தனித்தனியான திட்டுக்களாகவே அவைகள் இருக் கின்றன. இடையிடையே இந்தி யப் பிரதேசங்கள் இருப்பதால், புதுவையிலிருந்து தொடர்பில் லாத 14 'தீவுகள்' கொண்ட 4 திட்டுகள் இருக்கின்றன. இவை, தபால், தந்தி, இரயில்வேபோன்ற அனைத்தையும் இந்தியாவிட மிருந்தே பெறுகின்றன.

காரைக்கால் :

தஞ்சாவூர் மாவட்டத்தின் கீழ்க் கரையோரத்தில் 53 சதுரமைல் பரப்புள்ள ஒரு பிரதேசமாகும். இதன் மொத்த மக்கள் தொகை 70,000-க்கு மேலாகும். இந்தப் பிரதேசம் 6 முனிசிபல் பிரிவுகள் கொண்டதாகும்.

18-ம் நூற்றாண்டில், தஞ்சா வூரை ஆண்டுவந்த மன்னர் சரபோஜி மகாராஜாவால் 50,000 சக்கரத்திற்கு வழங்கப்பட்ட இது பலதடவை ஆங்கிலேயரால் கைப் பற்றப்பட்டும், 1814-ம் ஆண்டில், பிரிட்டிஷ்—பிரெஞ்சு ஒப்பந்தத் தின் விளைவாக, பிரெஞ்சுக்கார ரிடம் திரும்பியது.

ஏனும் :

இது ஆந்திர மாநிலத்தில் 5½ மைல் சுற்றளவுள்ள ஒரு இடமா கும். மக்கள் தொகை சுமார் 5,850 ஆகும்.

1750-ம் ஆண்டில்,ஹைதராபாத் மன்னர் நைசாம், இதற்குப் பிரெஞ்சு ஆதிபத்திய உரிமையை அங்கீகரித்தார்.

மாகி :

இப்பிரதேசம் மலபாரின் வட பாகத்திலுள்ளது. சுமார் 23 சதுர மைல் பரப்பளவு கொண்ட இப் பிரதேசத்தின் மொத்த மக்கள் தொகை 18,000-க்கு மேலாகும். வடகரை மகாராஜா, இப்பிரதே சத்தை 1721-ல் மாகி நதி முகத் துவாரத்தில் பிரெஞ்சுக்காரர்க ளிடம் ஒப்படைத்தார்.

இப்பகுதிகளில் படைவைத்துக் கொள்ள பிரெஞ்சுக்கு அனுமதி யளிக்கப்பட்டது. அந்தப் படை கள் 1725-ம் ஆண்டு வரையிலும் கோழிக்கோடு போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வடகரை ராஜா—பிரெஞ்சுக்காரர் ஒப்பந்தத் தால் 1726ல், இப்பகுதி பிரெஞ் சுக்காரருக்கென ஊர்ஜிதப்படுத் தப்பட்டது. 1761ல் புதுவை வீழ்ச்சியின்போது, மாகி பிரதேச மும் மேஜர் மன்றோ வசமாகிறது. இரண்டாண்டுகளுக்குள் மீண்டும் அது மீட்கப்பட்டும், 1779ல், அது ஆங்கிலேயர் கைக்குமாறிற்று. திரும்பவும் கடைசிமுறையாக 1817ல் பிரெஞ்சுக்காரரிடம் சிக் கிக் கொண்டது.

புதுவை, காரைக்கால், ஏனும், மாகி ஆகிய இந்தப் பிரெஞ்சிந்தி யப் பிரதேசங்களில் எல்லாம் இந் திய நாணயங்கள்தான் செலாவணி யில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

சென்னையில் உள்ள உபரி அரிசி

மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்!

சென்னை அரசாங்கத்திடம் உபரியாக உள்ள ஒரு லட்சம் டன் அரிசியை மத்திய அரசாங்கம் பெற்றுக்கொள்வதற்காக, மத்திய அரசாங்க உணவிலாக்கா 'டைரெக்டர் ஜெனரல்' சென்னை வந்துள்ளாராம்.

இந்த உபரி அரிசியைப் பெற் றுக் கொள்வது பற்றி சென்னை உணவு மந்திரியுடனும், உணவு இலாகா அதிகாரிகளுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிய வருகிறது.

1727-ம் ஆண்டு தேர்தல் புத்தகம்

லண்டனில் கிடைத்துள்ளது!

1727-ம் ஆண்டில் லண்டனில் நடைபெற்ற தேர்தலைப் பற்றி புத்தகம் ஒன்று இப்போது கிடைத் திருக்கிறதாம். அந்த ஆண்டில் தான் இரண்டாம் ஜார்ஜ் மன்ன ராக முடிசூட்டிக் கொண்டார்.

'போல் புக்' என்று அழைக் கப்படும் இப்புத்தகத்தில் ஒவ் வொரு வாக்காளரும் எவ்வாறு வாக்குப் பதிவு செய்தார்கள் என் றும், வாக்களிக்காதவர்கள் என் வாக்களிக்கவில்லை என்றும் குறிப் பிடப்பட்டிருக்கிறது.

நாட்டிற்கு வெளியே சென்ற வர்கள், கடல்களில், கப்பல்களில் இருந்தோர் ஆகியோர் வாக்குப் பதிவு செய்யவில்லை என்றும் தெரி விக்கப்பட்டிருக்கிறது.

இப்போது அந்த புத்தகம் 'கில்டு ஹாலின்' புத்தக நிலையத் தில் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

சிறையில் கைதிகள் கலவரம்

போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்: மூவர் மரணம்

கொலம்பியாவைச் சேர்ந்த 'பாகுவே' எனும் சிறையிலிருந்து தப்பியோடுவதற்காக 250 கைதி கள் கலவரம் செய்ததாகவும், நிலைமை மீறிவிட்டதால் சிறை வார்டர்கள் ஒன்றும் செய்ய முடி யாமல் போகவே போலீசார் தரு விக்கப்பட்டதாகவும், போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டதாகவும் தெரிகிறது.

போலீசாரின் துப்பாக்கிப் பிர யோகத்தால் கைதிகளில் 3 பேர் உயிர் துறந்தனராம்; மேலும் இரண்டு கைதிகளுக்கும், 4 வார்டர் களுக்கும் பலத்த காயமேற்பட்ட தாகவும் தெரிய வருகிறது.

4 பிரிட்டிஷ் மந்திரிகள் விலகினர்

பிரிட்டனின் மந்திரி சபையி லிருந்து பாதுகாப்பு மந்திரி லார்டு அலெக்சாண்டர், கல்வி மந்திரி திருமதி கிளாரன்ஸ் ஹார்ஸ் பர்க். லார்டு சான்ஸலர் லார்டு சிமன்ஸ், அட்டர்னி ஜெனரல் சர். லயனல் ஈல்ட் ஆகிய 4 அமைச்சர்களும் தங்கள் பதவியிலிருந்து இராஜி னமாச் செய்துவிட்டனராம்!

கைத்தறி குடிசைத் தொழில் அபிவிருத்தி

மத்திய சர்க்கார் நிதி உதவி

புதுடில்லி, அக். 17—

மாநிலங்களில் கைத்தறி, குடி சைத் தொழில் அபிவிருத்திக்காக, மத்திய சர்க்கார் மேலும் மானியங் கள் அளித்திருப்பதாகவும், அதில், அகில இந்திய கைத்தறி போர் டுக்கு—கைத்தறி பண்டங்கள் விளம்பரத்துக்காகவும், பிரசாரத் துக்காகவும் ரூ. 3,22,000 அளித் துள்ளதாகவும் தெரிய வருகிறது.

மேலும், சென்னை கைத்தறி 'ஷோரூம்' (காட்சி சாலை) செல வுக்காகவும் ரூ. 4,000 கூடுதல் மானியம் அளித்திருக்கிறதாம்.

மைசூருக்கு, நெசவுத் தொழில் 'டெமான்ஸ் டிரேட்டர்கள்' பயிற் சிக்காக ரூ. 9,000-மும், ஹைதரா பாத்தில், கைத்தொழில் கண் காட்சி ஒன்றுக்கு ரூ. 6,000-மும் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரி கிறது.

வேண்டுமா "கம்பரசம்"? வெளியிடவா 2-ம் பாகம்?

ஆச்சாரியாருக்கு அண்ணா அறைகூவல்

"இராமாயணம் பற்றி, 'கம்பரசம்' முதல் பாகமே வெளிவந்தது; இரண்டாவது, மூன்றாவது பாகங்கள் வெளிவரும் என்று எழுதியதும், பல தமிழ் அபிமானிகள், 'வெளியிடவேண்டாம்,' என்று எழுதினர்; 'பலர் மனம் புண்படும்படி எழுதுவானேன்!' என்று நிறுத்தினேன்; இப்போது ஆச்சாரியார், 'கம்ப ரசத்'தின் இரண்டாம் பாகத்தை வெளியிடச் சொல்லுகிறார் போலும்!

"கம்ப இராமாயணத்தின் பெருமை பேசித் திரிந்த பெரும் புலவர்கள் எல்லாம் வாய்மூடி மௌனிகளாயிருக்கும்போது, ஆச்சாரியாரும், அவரது அடிகள் சிலரும் இராமாயணப் பிரசாரத்தில் ஈடுபடுவானேன்?"

—என்று, சென்னை இராயபுரம் 2-வது வட்டச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் பொதுச் செயலாளர் அவர்கள் கேட்டுவிட்டு, "இராவணன் தோன்றிய மூலகாரணம் என்ன?" என்று துவாரபாலகர்கள் கதையைப் புராணப்படி கூறிவிட்டு, "இப்படி மூலகாரணங்களை விளக்கி, ஆச்சாரியார்களைக் கூண்டிலே நிறுத்தாததினாலேயே இவர்கள் 'நீதிபதி'களாகிவிட முடியுமா?" என்றும், போட வேண்டாம்,' என்று நினைத்த கம்ப ரசப் புத்தகங்களைப் போடச் சொல்லுகிறாரா ஆச்சாரியார் என்றும் கேட்டுவிட்டு, உலகத்தின் பல நாடுகளிலுமிருந்த அவதாரங்களை அழித்து, பல தெய்வ வணக்கத்தை ஒழித்து, மக்கள், மறுமலர்ச்சி பெறப் பாடுபட்டவர்களுக்கு இருந்த எதிர்ப்புகளைக் காட்டிலும், ஆச்சாரியார் போன்றவர் நமது மறு மலர்ச்சி முயற்சிக்குக் காட்டும் எதிர்ப்பு எந்த வகையிலும் பெரிதல்லவென்றும், எனவே, தோழர்கள் பொறுப்புடன் பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மேலும் பொதுச் செயலாளர் அவர்கள் கூறியதாவது :—

"இராமாயணம் பிரசாரம் செய்வதால் ஆச்சாரியார் தனது இனத்திற்கு இலாபம் இருப்பதாக நம்புகிறார் ; அதனால்தான் விடாப்பிடியாக, தன் நிலையையும் மறந்து, இராமாயணப் பிரசாரத்தில் ஈடுபடுகிறார்.

"'இராமாயணப் புண்ணிய காதை ; இராமன் கடவுளின் திரு அவதாரம்' என்கிறார் ஆச்சாரியார் ; இராமாயணம் போன்ற அவதார புருடர்களும், வேறு பல நாடுகளிலும் ஒரு காலத்தில் இருந்திருக்கிறார்கள்'

"ரோம் நாட்டிலும், கிரேக்க நாட்டிலும் இல்லாத ஆண்டவர்களா இந்த நாட்டில் இருக்கின்றார்கள்?

"நாம் இங்கு ஆண்டவனுக்கு ஆயிரங்கால் மண்டபம் கட்டினோம் என்றால், ரோம் நாட்டில் பதினாயிரங்கால் மண்டபம் கட்டிவைத்திருந்தார்களே!

"இங்கே, இராமனின் காதையைக் காவியமாக்க கம்பனிருந்தால், அங்கே ஹோமர் இருந்தான்!

"இன்று, அந்த நாட்டிலிருந்த எண்ணற்ற கடவுளர்கள் எங்கே போனார்கள்? என் மறைந்தார்கள்'?

"அந்த நாட்டு மக்கள் அந்தக் கடவுளர்களை மறந்துவிட்டதினால் நரகப் படுகுழியிலா விழுந்து விட்டார்கள்? இல்லையே! மாறாக, நாகரீகமான வாழ்க்கை நடத்துகிறார்கள் ; நானிலத்தோருக்கு நல்ல பல பொருள்களைத் தந்திருக்கிறார்கள் ; இவற்றிற்கெல்லாம் என்ன சொல்லுகிறார் ஆச்சாரியார்?

"என்னதான் தன் இனத்திற்கு லாபம் தருவதென்றாலும், இந்த 10-ம் பசலிப் பேச்சை இன்னும் எத்தனை நாளைக்குத்தான் ஆச்சாரியார் பேசிக் கொண்டிருக்கப் போகிறார்?

"இராமாயணம் நடந்த ஒன்று என்று நாம் கருதவில்லை ; நடந்ததாகவே வாதத்திற்காக வைத்துக் கொள்வோம் ; கம்ப ராமாயணப்படி இராவணன் என்ன கெட்டுப் போய்விட்டான்?

"இராவணன் இருந்த வரையில்—சாகிறவரையில் அவனுக்கு என்ன குறைவு, என்ன நஷ்டம்? இந்திரன் கால் அமுக்க, சந்திரன் வெஞ்சாமரம் வீச, தேவகன்னியர் நடனமாட, பஞ்சபூதங்கள் கூப்பிட்டவுடன் ஓடிவர — இப்படி, தேவேந்திரனுக்கும் கிடைக்காத வாழ்வு பெற்று, வாழ்கிறவரையில் மகிழ்வுடன் வாழ்ந்த இராவணனுக்கு என்ன குறை?

"வாழ்க்கையில் சகலசம்பத்துக்களையும் பெற்று, சுகபோகமாக வாழ்ந்துவிட்டுச் சாவதினால் என்ன நஷ்டம்?

"என், நாங்கள், இராவணனைப் போன்றவர்கள் என்று சொல்லிக் கொள்ளக்கூடாது? ஆச்சாரியார் சொல்ல வேண்டாமா? இராம அவதாரத்தின் மகிமை குறித்து, இராமாயணத்தைப் பற்றிப் படித்து மறந்தவர்களும், படிக்காத பாமரர்களும் தானே பேசுகின்றனர்?

"மிராசுதார், குடியானவனைப் பார்த்து, 'கெட்டுப் போகாதே,' என்று கூறினால், என்ன பொருள்? வெள்ளை வேட்டி கட்டாதே என்பதுதானே? இதைப் போலத்தானே இருக்கிறது, இராவணனைப் போற்றாதே என்பதும்!"

காமராசர் தவறு செய்யாதிருந்தால் மட்டுமே போதாது!

ஆச்சாரியார் செய்யத் தவறிய நன்மையையும் செய்ய வேண்டும்!

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் ஆரம்பத்தில் பேசியதாவது :—

"இராயபுரத்தில்தான் தி. மு. கழகத்தின் தலைமை நிலையம் இருக்கிறது. அந்த வட்டத் தோழர்கள் ஆர்வமிகுதியுடன் பணியாற்றவில்லையே என்ற வருத்தம் எனக்கிருந்ததைக் குறைக்கும் வகையில், இன்று, இந்த வட்ட இளைஞர்கள் மிகச் சிறப்பானதொரு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள் ; அதற்காக தலைவர்களுக்கு நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

இன்று நாட்டில் உள்ள காமராசர் ஆட்சி நாட்டு மக்களுக்கு நல்லது ஏதேனும் செய்வதற்கு தைரியமோ, அல்லது கெட்டது ஏதேனும் செய்வதற்கு துணிவோ இல்லாததாக இருக்கிறது.

நாட்டில் நிலவும் சாதிமத பேதா பேதங்களை ஒழிக்க, அரசாங்கம் முன்வரவில்லை.

தீவிரமான பொருளாதார மாற்றங்களைச் செய்ய புரட்சிகரமான திட்டங்கள் தீட்ட நேரமில்லையோ, நினைப்பில்லையோ, தெளிவில்லையோ— என்ன இல்லையோ நமக்குத் தெரியாது ; ஆனால், புரட்சிகரமான திட்டங்கள் மட்டும், நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகத் தீட்டப்படவில்லை.

ஆச்சாரியாராவது தனது அறிவில் நம்பிக்கை கொண்டவராய், அரசியல் ஆணவம் மிக்கவராய், விஷப் பரீட்சை ஒன்றைச் செய்யும் துணிவைப் பெற்றிருந்தார் ; ஆனால் காமராசர் ஆட்சியோ, 'எப்படியேனும் அரசாங்கம் நடந்து கொண்டிருந்தால் சரி,' என்றெண்ணுகிறது போலும்! இந்த நிலைகளிலிருந்து, நாம் அல்ல— காங்கிரஸ்காரர்கள் தெரிந்து கொள்ளவேண்டியது —'காமராசர் அறிவாளியா, ஆச்சாரியார் அறிவாளியா' என்பதல்ல — மாறாக, காமராசருக்கும், ஆச்சாரியாருக்கும் உள்ள அடிப்படை வித்தியாசம் என்ன என்பதைத்தான்!

காமராசர் தனது குறைபாடுகளை உணர்பவர் ; ஓரளவு மக்களை மதிப்பவர்!

ஆச்சாரியார் மக்களையும் மதிக்கவில்லை ; தனது குறைபாடுகளையும் உணரவில்லை.

நாட்டில் எதையேனும் செய்தால், 'யாருக்கேனும் கோபம் வருமோ,' என்ற மருட்சி வேறு இருக்கிறது.

'நிலத்தை, பிரபுக்களிடமிருந்து பிடுங்கி விவசாயிகளுக்குக் கொடுத்தால், பிரபுக்கள் கோபிப்பார்களோ,' என்ற நிலையும், 'கொடுக்காவிட்டால், விவசாயிகள் போராட்டம் துவங்குவார்களோ,' என்ற அச்சமும், தொழிலாளிக்கு கூலி உயர்வு எப்படித் தரச் சொல்வது, முதலாளியை— என்ற பயமும் ; பார்ப்பனர்களே, நீங்கள் பதவிமோகம் கொள்ளாதீர்கள்,' என்று கூறினால், அவர்கள் எங்கே சீறுவார்களோ என்ற மருட்சியும் காமராசருக்கு இருக்கிறது.

நல்லதைச் செய்யும் தைரியமோ, கெட்டதைச்செய்யும் வலிவோ இல்லாதவராயிருக்கிறார் காமராசர்!

எனவேதான், காமரா்சரை, நாம், 'கோட்டாத தேள், கடிக்காத பாம்பு, ஓடாத ரயில்,' என்று கருதுகிறோம்.

தேள் கொட்டாத வரையில், பாம்பு கடிக்காத வரையில் பரவாயில்லை ; ஆனால், ஆச்சாரியாரோ, தேடித் தேடிக் கொட்டும் தேளாக இருந்தார். அவர் ஆட்சி தண்டவாளத்தை விட்டே இறங்கி ஓடும் ரயிலைப் போன்றிருந்தது!

எனவே, பொதுவில் காமராசர் ஆட்சி மிக 'டல்!'

இந்த சூட்சமத்தைப் புரிந்து கொள்ளாத கம்யூனிஸ்டு நண்பர்கள், நாம், காமராசருடன் ஐக்கியமாகிவிட்டதாக நினைத்துத் திட்டுகிறார்கள்.

அவர்களுக்குச் சொல்லுகிறேன் —ஆச்சாரியார் ஆட்சிபீடமேறிய 2 வருடம் வரை யாருடனும் மோதிக்கொள்ளவில்லை ; அந்த இரண்டு வருடத்திலும், நாடெங்கும் சுற்றினர் ; சென்றவிடமெல்லாம் அவருக்குப் பலதரப்பட்ட மக்களாலும் வரவேற்புத் தரப்பட்டதை, அவர், தனது ஆணவ குணத்தால், தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டார். நாடு, நம் பக்கமிருக்கிற தென்றெண்ணி விஷப் பரீட்சை செய்ய முற்பட்டார். விளைவுகள் எல்லோரும் அறிந்ததே!

அதேபோல, காமராசர், இன்று நாடெங்கும் வரவேற்கப்படுகிறார். அதை வைத்துக்கொண்டே, ஆச்சாரியாரைப் போல காமராசரும் தப்புக் கணக்குப் போட்டுவிடக் கூடாது!

இன்று காமராசருக்கு—அவர் திராவிடப் பெருங்குடி மகனாயிருக்கிறார் என்ற அன்பினால் தரப்படுகிற ஆதரவு—தொடர்ந்து நீடிக்கவேண்டுமானால், காமராசர், ஏழைகள் வாழ்வு மலர, சாதி பேதம் ஒழிய, சமுதாயம் திருந்த, மக்கள் மக்களாக வாழ ஏதேனும் நல்லன பல செய்தாக வேண்டும்.

ரங்க ராட்டினம் சுற்றுவது போல் ஆட்சி சுற்றிச் சுற்றி வந்து கொண்டே இருப்பதினால் ஏழையின் வாழ்வில் முன்னேற்ற மிருக்காது.

காமராசர் சின்னாட்களுக்கு முன் பேசியிருக்கிறார் — 'பலர் பேசுகிறார்கள் ; யோசனை கூறுவதில்லை' — என்பதாக! அவர், அதைத் தூயமனதுடன் கூறியதாகவே கொண்டு சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

காமராசர் ஆட்சி, ஆச்சாரியார் ஆட்சி செய்த தவறுகளைச் செய்யாதிருந்தால் மட்டும் போதாது ; அவரது ஆட்சி செய்யத் தவறிய நன்மைகளையும் காமராசர் செய்ய வேண்டும். அப்போதுதான், 'ஆச்சாரியார் போய், காமராசர் வந்தார்,' என்று மக்கள் பேசுவதில் பயனிருக்க முடியும்.

'என்ன நன்மைகளைச் செய்வது,' என்று காமராசரும், காங்கிரஸ்காரர்களும் கேட்கலாம் ; அவர்களுக்குச் சொல்கிறேன்— அவர்களின் தலைவரான பண்டித நேருவையே, 'என்ன நன்மைகள் செய்வது' — எனக் கேளுங்கள்— என்று!"

ஆசியாவா? ஐரோப்பாவா?

உலகத்தின் 'தலைவிதி'யை யார் நிர்ணயிப்பது?

சென்னையில் மாணவர்கள் விவாதம்

"உலகத்தின் 'தலைவிதி'யை நிர்ணயிக்கிற அதிகாரத்தை வருகிற 50 ஆண்டுகளில் ஆசியா தான் கொண்டிருக்கும்; ஐரோப்பா அல்ல,"

எனும் பொருள் குறித்து சென்னை ராஜதானிக் கல்லூரியில் ஒரு விவாதம் நடைபெற்றிருக்கிறது.

லண்டன் 'ஆக்ஸ் போர்டு' பல்கலைக் கழகத்தின் மாணவப் பிரதிநிதிகளாக சென்னைக்கு வந்துள்ள ஜோனாதன்பாஸ்வெல் என்பாரும், புரூஸ்பர்டன் என்பவரும் மற்றைய மாணவர்களுடன் இந்த விவாதத்தில் கலந்து கொண்டனர்.

எஸ். எச். பெஸ்ட் என்ற 'பிரிட்டிஷ் கவுன்சிலி'ன் பிராந்தியப் பிரதிநிதி 'அப்சர்வரா'க இருந்தார்.

"உலக விவகாரங்களில்வரும் 50 ஆண்டுகளில் முடிவு கூறப் போகிறது," என்ற விவாதத்தை பாஸ்வெல் துவங்கி வைத்துப் பேசியதாவது :

"பொருளாதார முன்னேற்றம், இராணுவ பலம், மக்களின் நம்பிக்கை, மனதிடம் இவைகளைக் கொண்டு கணக்கிட்டால் 50 ஆண்டுகளில் உலக விவகாரங்களை நிர்ணயிப்பது ஆசியாவாகத்தான் இருக்கும் ; ஐரோப்பாவாக இருக்க முடியாது ; ஐரோப்பா, உலகத்தில் யாரையும் கட்டி ஆளுகிற நிலையில் இனியும் இல்லை ; கடந்த நூற்றாண்டிலே ஐரோப்பிய மக்களுக்கிருந்த 'தன்னம்பிக்கை' இப்போது இல்லை ; மாறாக, ஆசியாவில் ஏராளமான முன்னேற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன ; இந்தியா, ஒரு புகழ்வாய்ந்த சுதந்திர நாடாகத் திகழ்கிறது ; சீனா ஒரு பலம்வாய்ந்த கம்யூனிச நாடாக உருவாகியுள்ளது. இந்த நிலையில், சர்வாதிகாரம், ஜனநாயகம் இவற்றில் உலகத்தை ஆளவேண்டியது எது என்பதை ஆசியாதான் நிர்ணயிக்க முடியும் ; ஆனால், கேள்வி எல்லாம், ஆசியாவின் மிகப் பெரிய நாடுகள் தொழில் நுணுக்க முன்னேற்றத்தையும் பெற்றுக்கொள்ளுமா என்பதுதான் ; அவர்கள், தங்களுக்கே உரித்தான வகையில், இந்தத் தொழில் நுணுக்க அறிவை மேலை நாடுகளிடமிருந்து பெற்று வந்திருக்கிறார்கள். ஐரோப்பா, ஆசியா ஆகியவற்றிடையே நேச உணர்வை வளர்த்துக் கொள்வதின் மூலம், இந்தத் தொழில் நுணுக்க முன்னேற்றத்தை ஆசியா பெற்றுவிட முடியும் ; இதற்காகவே நம்மிடம் ஒரு கருவி கூட இருக்கிறது ; அக்கருவிதான் 'பிரிட்டிஷ் காமன்வெல்த்,'" என்றார்.

இந்த வாதத்தை எதிர்த்து வெங்கடேசன் என்ற மாணவர் பேசுகையில் கூறியதாவது :—

"வருகிற 50 ஆண்டு காலத்தில், உலகில் சமாதானம் நிலவும் என்றோ, ஒரு மூன்றாவது உலக மகா யுத்தம் மூளாது என்றோ உத்திரவாதமாகக் கூற முடியாது ; 'சமாதானமா, சண்டையா,' என்பதைத் தீர்மானிப்பது ஆசியா அல்ல ; ஐரோப்பாதான்! இந்தியா சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்ட முயற்சிக்கிறது என்பது உண்மைதான் ; ஆனால், இந்தியாவின் குரல் இன்னும் வலிமை பெறவில்லை ; இன்னும், படை பலம், உலகத்தை ஆட்கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

"தங்கள் தங்கள் நாடுகளைச் சீர்செய்வதற்கே ஆசிய நாடுகளுக்கு இன்னும் 50 ஆண்டுகளுக்கு அதிகமாகத் தேவைப்படலாம் ; விஞ்ஞானத் துறையில், ஐரோப்பாவோடு ஒப்பிட்டால், இந்தியா மிகவும் பின்தங்கிக் கிடக்கிறது," என்றார்.

தோழியர் ஆவுடையம்மா என்ற மாணவியும் இம்மாதிரியே குரல் எழுப்பினார்.

பெர்னாண்டஸ் என்பவர், "ஆசியா 50 ஆண்டுகளில் பலம் பெறும்," என்று ஆதரித்துப் பேசினார்.

புரூஸ் பர்டன் என்ற லண்டன் மாணவர் பேசுகையில் கூறியதாவது :—

"உலகத்தில், ஆசியா—ஐரோப்பா ஆகியவற்றிடையே நேச உணர்விருந்தாலொழிய, உலகில் சமாதானம் நிலவும் என்பதற்கான நம்பிக்கை இல்லை ; ஐரோப்பியத் தலைவர்கள் நம்பிக்கையை இழந்துவிட்டனர் என்பது மட்டுமல்ல ; இந்தியா சுதந்திரம் பெற்றதைப் போன்ற பெரிய நிகழ்ச்சிகள் எல்லாம், நாடுகளிடையே நேச உணர்விருக்க வேண்டுமென்பதைத்தான் சொல்லுகின்றன ; யுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பா மீண்டும் பழைய நிலையைப் பெற்றுவிட்டதென்பது, மக்களுக்கு எத்தனை ஆக்கசக்தி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. சமுதாயத்திற்குத் தேவையான சட்டமன்ற அமைப்பு முறைகளை வகுப்பதில், ஆசியாவிற்கு, பிரிட்டன் வழிகாட்டியாயிருந்திருக்கிறது.

"உலகத்திற்கு ஆபத்து இருக்கிற இடமெல்லாம் ஜெர்மனிதான் ; ஐரோப்பிய நாடுகள் இன்னும் பெரிய செல்வாக்குடையனவாகவே இருக்கின்றன ; 'அரசியல் விடுதலையளிப்பது' என்ற பிரிட்டனின் கொள்கை, ஆசியாவிலிருந்த பலனைத் தந்திருக்கிறது ;

(4-ம் பக்கம் பார்க்க)

எழில்மிகு இலங்கையில் இரா. நெடுஞ்செழியன்

விமான நிலையத்தில் மகிழ்ச்சி பொங்கும் வரவேற்பு

கழகத்தாரும் மற்றவரும் காட்டிய எழுச்சி

சுன்னுகம், அக். 15—

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கொழும்பு செல்லும் வழியில், நேற்று நண்பகல் 1-30 மணிக்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காங்கேசன் துறை விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது, யாழ்ப்பாணக் கழகத் தோழர்களும், பிற அன்பர்களும் ஏராளமாக விமான நிலையத்தில் கூடிநின்று, ஆர்வமும், எழுச்சியும் மிக்கதோர் வரவேற்பு அளித்தார்கள்.

விமானத்திலிருந்து இறங்கி, விமான நிலையக் கட்டிடத்தை நோக்கித் தோழர் இரா. நெடுஞ்செழியன் வரும்போது, 'நெடுஞ்செழியன் வாழ்க!' 'அண்ணா வாழ்க!' என்பன போன்ற வாழ்த்தொலிகள் கிளம்பின. திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரும், பல்வேறுவகைச் சங்கங்களைச் சார்ந்தோரும், தனிப்பட்டோரும் வரிசையாக நின்று தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு மலர் மாலைகள் சூட்டினார்கள். தாங்க முடியாத அளவு மாலைகளைச் சுமந்துகொண்டு அவர், நிலையக் கட்டிடத்துக்குள் நுழைந்தார்.

நிலையத்தில் முறைபாக நடைபெறவேண்டிய தணிக்கை செய்தல் போன்ற நடவடிக்கைகள் ஆன பிறகு தோழர் நெடுஞ்செழியன் கழகத் தோழர்களோடும், பிற தமிழன்பர்களோடும் சிறிதுநேரம் உரையாடிக் கொண்டிருந்தார். முக்கியமானவர்களெல்லாரும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

பிறகு செய்தித் தாள் நிருபர்கள் சூழ்ந்துகொண்டார்கள்.

அவர்களுக்கு விடையளிக்கும் முறையில், "நான் இப்பொழுது தான் முதல் தடவையாக இலங்கை வருகிறேன். இது எனக்கு மகிழ்ச்சியும் விருப்பமும் தரக்கூடிய வாய்ப்பாகும். இலங்கை மக்களையும், இலங்கையில் வாழும் திராவிடர்களின் நிலையையும் நான் சிறிதளவு புரிந்துகொள்ள இந்த வாய்ப்பு பயன்படும் என்று கருதுகிறேன்." என்று தோழர் இரா. நெடுஞ்செழியன் கூறினார்.

"இலங்கையில் வாழும் இந்தியர்களின் நிலை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்ட கேள்வி ஒன்றுக்கு, "இலங்கையரும், இந்தியரும் நட்புறவோடு வாழக்கூடிய நிலையைத்தான் நான் விரும்புகிறேன்" என்று விடையளித்தார்.

விமானம் 2 மணிக்குக் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. கூடியிருந்த மக்கள் தோழர் நெடுஞ்செழியனோடு இருந்து போட்டோக்கள் எடுத்துக் கொண்டான பிறகு, ஆரவாரத்தோடு வழியனுப்பி வைத்தனர்.

கல்லக்குடி அறப்போர்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

13-7-53—திருச்சி மாவட்டத்திலுள்ள கல்லக்குடி, மங்கம்மாபுரம், சங்கமராசபுரம், கீழம்பில், வெள்ளனூர், பல்லவபுரம், ஆதிகுடி, தழுதாழைமேடு, திருமானூர், தாப்பாய், மணப்பாறை ஆகிய பஞ்சாயத்து மன்றங்கள் 'கல்லக்குடி' என்ற பெயர் மாற்றத்திற்கு ஆதரவு தந்து தீர்மானங்கள் நிறைவேற்றின.

" திராவிட முன்னேற்றக் கழகச்செயற்குழு, சென்னை 'அறிவகத்தில்' கூடி அறப்போர் தலைவர் நியமனத்தை வரவேற்றும், போராட்டத்திற்கான திட்டங்களை தீட்டித்தர பொதுச் செயலாளருக்கு அதிகாரம் அளித்தும் தீர்மானம்.

" அன்றே, பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

14-7-53—இரவு 12 மணிக்கு கல்லக்குடி அறப்போர் பாசறையில், போராட்டத் தலைவர் கருணாநிதி, தொண்டர்களிடையே அறப்போர் குறித்துப் பேசினார்.

5-7-53—அறப்போர் துவக்கம்—காலை 9 மணிக்கு அறப்போர் ஆரம்பமாயிற்று. தோழர் கருணாநிதி, 'கல்லக்குடி' என்று அச்சடிக்கப்பட்ட தாளை ஒட்டினார்: அவர் உள்பட ஐந்து பேர் கொண்ட குழு கைது செய்யப்பட்டனர்.

" —12 மணிக்கு தோழர் இராமப்பையா அவர்கள் தலைமையில் அறப்போர்—26 பேர் கைது செய்யப்பட்டனர்.

" —3 மணிக்கு மூன்றுவது படை தோழர் கண்ணதாசன் தலைமையில் சென்றது; போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்; வீரர்கள்மீது 64 ரவுண்டுகள் துப்பாக்கிப் பிரயோகம்; தோழர் லால்குடி- நடராசன், திருச்சி கேசவன் ஆகியோர் மரணம்; 11 பேர் காயமுற்றனர்.

" அறப்போருக்கு ஆதரவு தந்து நாடெங்கும் ரயில் நிறுத்தம்.

16-7-53—சென்னை சட்டசபையில் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி அவசரத் தீர்மானம் விவாதம்.

" —இரண்டாவது நாள் தோழர் கே. ஆர். இராஜா தலைமையில் அறப்போர்: யாரும் கைது செய்யப்படவில்லை.

17-7-53—தோழர் கருணாநிதி உள்பட ஐவருக்கு ஆறு மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இந்த அறப்போரில் கலந்து கொண்ட 35 தோழர்களுக்கு சிறை தண்டனை அளிக்கப்பட்டது.

" —கண்ணதாசன் முதலிய எட்டு தோழர்கள் மருத்துவ மனையிலிருந்து மாற்றப்பட்டு லால்குடி சப்-ஜெயிலில் காவலில் வைக்கப்பட்டனர்.

19-7-53—சென்னை கடற்கரையில் துப்பாக்கிப் பிரயோகக் கண்டனக் கூட்டம்: சட்டசபைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

" —கல்லக்குடி பெருமக்கள் பல ஆயிரத்திற்கு நேர்பட்டோர் ரயில்வே அமைச்சருக்கு கையெழுத்திட்டு, 'டால்மியாபுரம்' என்ற பெயரை 'கல்லக்குடி' என்று மாற்றிப் பெயரிட வேண்டுமென மகஜர் அனுப்பினர்.

20-7-53—டால்மியா ஆலைத் தொழிலாளர்களின் அனுதாப வேலை நிறுத்தம்.

" —கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகம் தவறானது என தோழர் ராஜா சிதம்பரம் அறிக்கை.

21-7-53—கல்லக்குடியில் அறப்போர் தொடர்ந்து நடைபெற்றது; போலீசார் 'கல்லக்குடி' என்று அச்சிட்ட தாளை ஒட்டுவதைத் தடை செய்யாதும், யாரையும் கைது செய்யாமலும், அதுபோலவே ஒட்டிய தாளை யாரும் அகற்றாமலும் பாதுகாத்து வந்தனர்.

21-9-53—சென்னை சர்க்கார் நியமித்த துப்பாக்கிப் பிரயோக பொது விசாரணைக் குழுவினர்—எம். வி. அரிகர அய்யர், சங்கர மேனன் ஆகிய நீதிபதிகள் விசாரணைத் துவக்கம்.

21-8-53—கல்லக்குடி பெயர் மாற்றம் தேவை என பாராளுமன்றத்தில் டாக்டர் ஏ. கிருஷ்ண சாமி அவர்களும், மற்றும் சில உறுப்பினர்களும், ரயில்வே அமைச்சரிடம் வற்புறுத்தினர்.

28-8-53—தோழர்கள் அம்பில் தர்மலிங்கம், கல்லக்குடி தம்புசாமி, கண்ணதாசன் உள்பட 24 தோழர்கள்மீது திருச்சியில் வழக்கு ஆரம்பமாயிற்று.

" —புது டில்லியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வி. வீராசாமி, ஈ. பி. மதுரம், பி. ராமச்சந்திர ரெட்டியார், என். ஆர். எம். சாமி, வி. முனுசாமி, வி. பூவராகசாமி, எம். பி. இராமசாமி, பி. இராமச்சந்திரன் ஆகியோர் 'கல்லக்குடி' என்று பெயரிடக் கோரி, ரயில்வே அமைச்சரிடம் மகஜர் தந்தனர்.

பொன் வயல் மூடப்பட்டது!

நஷ்டமே காரணமாம்!

பெங்களூர், அக். 13—

பெங்களூரிலிருந்து சுமார் 100 மைல்கள் தொலைவிலுள்ள டும்கூர் மாநிலத்தைச் சேர்ந்த பெல்லாரா பொன் வயல், மைசூர் சர்க்காரால் மூடப்பட்டுவிட்டது என்று மைசூர் கீழ் சட்ட சபையில், அமைச்சர் சித்தவீரப்பா தெரிவித்துள்ளார்.

இதற்குக் காரணம் காட்டிப் பேசுகையில், அந்தப் பொன் வயல் நஷ்டத்தில் வேலை செய்ததாகவும், இதுவரையில் ரூ. 12 லட்சம் நஷ்டமேற்பட்டுள்ளது என்றும், அச்சுரங்கத்திலும் கூட போதிய தங்கம் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஆப்பிரிக்க பாதிரி சுட்டுக் கொல்லப்பட்டார்

30 குடிசைகளும் தீக்கிரை

நைரோபிக்கு வடக்கில் 15 மைல் தொலைவிலுள்ள கிபாம்பு என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ள கத்தோலிக்க பிரசாரக் குழுவினர்களின் 30 குடிசைகளை நூற்றுக்கு மேற்பட்ட பயங்கரவாதிகள் சூழ்ந்து கொண்டு, அவைகளை சுட்டுச் சாம்பலாக்கி விட்டனர்.

பிரபல ஆப்பிரிக்க பிரசாரகரான டேவிட் கிஷபோஜ் என்பவரைத் தலையில் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று, அவர் சவத்தை மேற்படி தீயில் போட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள்

" 20 திரிகோணமலை (வரவேற்பு)

" 21 பேராதேனிய பல்கலைக் கழகம்(கண்டி) (சொற்பொழிவு)

" 22 நுவரேலியா (சொற்பொழிவு)

" 23 மட்டக்களப்பு (சொற்பொழிவு)

" 24 இ. தி. மு. க. சார்பாக கொழும்பில் பொதுக் கூட்டம்

" 25 4—4-30 மணிக்கு: நுகேகோடையில் வரவேற்பு
4-30 முதல் 6 மணி வரை: நகர கிளைக் கழக சங்கங்களைபார்வையிடுதல்

இடையில் கல்லூரிகளிலும், சில கூட்டங்களிலும் கலந்து கொள்வார்.

கீழூரில் விடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுவார்கள் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இப்போதுள்ள பிரெஞ்சு - இந்திய கலாச்சார நிலையங்களும், இதர மிஷனரிகளும் அப்படியே நீடிக்கவும் புதிய ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறதாம்

★

வாக்களிப்பு விவரம்

பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்க, கீழூரில் நடைபெற்ற பிரெஞ்சிந்திய சட்ட சபை முனிசிபல் உறுப்பினர்கள் கூட்டத்தில் பெருவாரியான உறுப்பினர்கள் இணைப்பை ஆதரித்து வாக்களித்துள்ளனர்.

கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட 178 உறுப்பினர்களில், 170 பேர், பிரெஞ்சிந்தியக் காலனி ஆதிக்கம் மறைந்து, இந்தியாவுடன் அப்பகுதிகள் இணைய வேண்டுமென்று வாக்களித்தனர்; எட்டு பேர் இணைப்பை எதிர்த்து வாக்களித்தனர்; மூன்றுபேர் நடுநிலைமை வகித்தனர்; பிரெஞ்சிந்திய சட்டசபையில் உள்ள மூன்று ஐரோப்பிய உறுப்பினர்களும், வாக்கெடுப்பில் கலந்துகொண்...னர்.

வாக்கெடுப்பின் முடிவை அறிவித்தபோது வெளியில் கூடிநின்ற மக்கள் வெள்ளம் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தது. 1-30 மணிக்கு முடிவு அறிவிக்கப்பட்டபோது துப்பாக்கிகள் முழங்கின.

கூட்டத்தில் சில தனி நிருபர்களும், போலீஸ் அதிகாரிகள் குழாம் ஒன்றும், சில வெளியார்களுமே அனுமதிக்கப்பட்டனர். இந்திய சர்க்கார் தூதுவர் கேவல் சிங், பிரான்சிலிருந்து அனுப்பப்பட்ட தனித் தூதுவர் பெர்ரி லாண்டே ஆகியோரும் கூட்டத்தில் இருந்தனர்.

காலை பத்து மணிக்கு கூட்டம் ஆரம்பமாயிற்று. கூட்டம் நடைபெற்ற இடத்தைச் சுற்றி இருநாட்டுப் போலீஸ்படைகளும் காவல் புரிந்தன.

தேர்தல் கலவரம்

23 பேர் பலி; 100 பேர் கைது

சென்ற சனிக்கிழமை யன்று ஜோர்டானில் நடைபெற்ற தேர்தலின்போது ஏற்பட்ட கலவரத்தின் விளைவாக 23 பேர் மாண்டனரென்றும், 300 பேர் காயமுற்றனரென்றும் தெரிய வருகிறது. கலகம் சம்பந்தமாக இதுவரை சுமார் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

கடலில் 60 வயது கிழவரின் சாகசம்

நியூயார்க்கைச் சேர்ந்த வில்லியம் வில்லிஸ் என்னும் 60 வயதுடையவர், ஒரு மரக்கட்டை மூலம் 115 நாட்கள் பிரயாணம் செய்து பசிபிக் மகா சமுத்திரத்தைக் கடந்திருக்கிறாராம்!

பெருவிலுள்ள காலாவ் என்ற இடத்திலிருந்து புறப்பட்ட அவர், 'பாகோ' எனும் இடம் வந்து சேரும் வரையில் வெறும் கடல் தண்ணீரையேதான் குடித்தாராம்! பார்லி, சர்க்கரை, பச்சை மீன் முதலியவற்றை ஆகாரமாக உட்கொண்டாராம்.

ரயில்வே வாகன்கள் ஆற்றில் விழுந்தன!

மேற்கு ரயில்வே தொடரியிலுள்ள புஷாவல் என்னும் நிலையத்திலிருந்து, சூரத்துக்குச் சென்று கொண்டிருந்த கூட்ஸ் வண்டி ஒன்று, சிந்தகிகா என்ற நிலையத்தின் அருகில் உள்ள ஆற்றுப் பாலம் ஒன்றைக் கடந்து கொண்டிருக்கையில் பெரியதோர் விபத்துக்குள்ளாகியது என்று தெரிகிறது.

இந்த விபத்து, சென்ற சனிக்கிழமையன்று மாலை 4-மணிக்கு நடைபெற்றதாகவும், அந்த வண்டியில் இணைக்கப்பட்டிருந்த 21 'வாகன்'கள் தடம் புரண்டு ஆற்றில் விழுந்துவிட்டன என்றும், பாலமும் இருப்புப்பாதையும் வெகுவாகச் சேதப்பட்டன என்றும் தெரிகிறது.

வண்டிக்கும், பாலத்துக்கும், இருப்புப்பாதைகளுக்கும் தான் ஆபத்தே தவிர, வண்டியிலிருந்த ரயில்வே ஊழியர்களுக்கு ஆபத்து ஏதுவும் ஏற்படவில்லையாம்!

சொற் பயிற்சிக் கூட்டம்

20—10—54 மாலை 6 மணிக்கு சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் இராமதாஸ் தலைமையில் 'இலக்கியத்தில் வீரம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் டி. என். இராவணன், கி. இராசேந்திரன், எம். எஸ். செயச்சந்திரன், சு. இரத்தினம், கி. நலங்கிள்ளி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ஆசியாவா? ஐரோப்பாவா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் ஆசியாவின் எதிர்காலத்தை உருவாக்கவும் அது உதவக் கூடும்; மேலும், அமெரிக்காவை, ஐரோப்பாவின் செல்வாக்கால் அணைத்துக்கொள்ள முடிகிறது; ஆசியாவில் இருப்பதைப் போல, ஐரோப்பிய நாடுகளில் பஞ்சம், பசி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற தீர்க்கப்பட வேண்டிய உள்நாட்டுப் பிரச்சினைகள் எதுவுமில்லை."

பின்னர் 'அப்சர்வர்' எல்லாருடைய கருத்துக்களையும் தொகுத்துச் சொல்லி, ஓட்டுக்கு விட்டதில், 'ஆசியாவே உலகப் பிரச்சினைகளுக்கு முடிவு கூறும்,' என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

மாவட்ட மன்றங்கள் தேர்தல்

கட்சிகளின் இறுதி விபரம்

மாவட்டம்	மொத்.	காங்.	கம்.	பி.சோ..	உழ.	சுயே
தஞ்சாவூர்	52	46	2	0	0	4
திருச்சி	52	41	0	0	0	10
தென் ஆற்காடு	52	46	1	0	1	4
வட ஆற்காடு	52	36	1	0	0	15
செங்கல்பட்டு	48	41	1	1	1	4
சேலம்	52	41	1	0	0	9
கோயம்புத்தூர்	52	41	1	5	0	5
மதுரை	52	43	1	1	0	6
ராமநாதபுரம்	50	42	0	0	0	8
திருநெல்வேலி	52	44	1	1	0	6

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.